தென்றலில் தவழ்ந்து வரும்
அபர்ணாலயாவின்
புது வசந்தம்
இடம்:
கைலாசபதி
கலை அரங்கம்
காலம்: 16 - 10 - 94
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
மாலை 5 மணி

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

அலை கடலில்
ஒரு ராகம்
அபர்ணாலயாவின்
புது வசந்தம்
இடம்:
கைலாசபதி
கலை அரங்கம்
காலம்: 16 - 10 - 94
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
மாலை 5 மணி

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 20 — வியாழக்கிழமை (06 – 10 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 313

### தீருவில் நினைவுக் கூட்டத்தில் கரிகாலன் உரை

# சமாதானத்திற்கான எம் விருப்பத்தை புலிகளின் பலவீனமாக கருதக்கூடாது!

## அரசு அப்படி நினைத்தால் விபரீத விளைவுகள் ஏற்படும்

வடமராட்சி, ஒக்ரோபர் 6

எமது தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றிடாக — எமது தாயகப் பிரதேசத்தையும் சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் தீர்வுத் திட்டம் ஒன்றை புதிய அரசு முன்வைத்தால் அதனைப் பரிசிலிக்கத் தயார் எனத் தலைவர் பிரபாகரன் கூறியுள்ளார். சமாதானத்திற்கான எமது இந்த விருப்பத்தை புலிகளின் பலவீனமாக அரசு கருதக்கூடாது. அரசு அப்படிக் கருதுமாயின் அதனால் ஏற்படும் விபரீத விளைவுகளை அது எதிர்கொள்ள வேண்டி வரும்.

— இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன். நேற்றிரவு வடமராட்சி தீருவிலில் பன்னிரு வேங்கைகளின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

யாழ். மாவட்ட கடற்புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி சுகி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. கரிகாலன் மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க இந்திய அரசு தொடர்ந்து முயற்சித்து வந்தது.

தமிழர்களுக்கு நிம்மதியான வாழ்வை மீட்டுத்தரவேண்டும் என்பதற்காக இங்கு இந்தியா தலையிடவில்லை. தன்னுடைய பூகோள நலனைப் பாதுகாக்கவே அது தலையிட்டது.

இந்த உண்மையை இந்திய அரசியல்வாதிகளும் ராஜதந்திரிகளும் இராணுவத் தளபதிகளும் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

### திறமையான தளபதிகளை இழந்தோம்

இந்தியாவின் சதியால் திலீபன், குமரப்பா, புலேந்திரன், ஜொனி, கிட்டு உட்பட பல திறமையான தளபதிகளை நாம் இழந்துள்ளோம்; இந்திய இராணுவம் பத்தாயிரம் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்துள்ளது; பல கோடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னிரு வேங்கைகளுக்கு நேற்று தமிழீழம் எங்கும் மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 6

தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் ஏழாவது ஆண்டு நினைவு தினம் நேற்று தமிழீழம் எங்கும் பெரு எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் நினைவுப் பந்தல்களும் வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

மக்கள் தமது வீடுகளின் முன்னால் பன்னிரு வேங்கைகளின் உருவப் படங்களை வைத்து விளக்கேற்றி மலர் சூடி அஞ்சலி செலுத்தினார்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளின் அலுவலகங்கள், பாசறைகள் மற்றும் தனியார் அலுவலகங்கள் எங்கும் விசேட அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் பன்னிரு வரினதும் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று குடாநாட்டில் தனியார் வர்த்த நிலையங்களும் விடுதலைப் புலிகளின் அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் மிகவும் குறைவாக இருந்தது.

நகரப் பகுதிகளில் பிரதான வீதிகள் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாகமவில் மனித புதைகுழியிலிருந்து மேலும் 3 எலும்புக்கூடுகள் நேற்று மீட்பு

### ஏ. எஸ்.பியை கைது செய்யும் உத்தரவு புறக்கணிப்பு

கொழும்பு, ஒக். 6

கொழும்பு நாகமவுக்கு சமீபத்தில் உள்ள மாலபே பகுதியில் போக்கந்தறப் பகுதியில் மனித புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கை நேற்று காலை மீண்டும் ஆரம்பமானது. மூன்று மனித எலும்புக் கூடுகள் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டதாக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அப்புதைகுழி தொடர்ந்தும் மாலையில் தோண்டப்பட்ட போது மனித மண்டை ஓடு மற்றும் எலும்புகளும், சாரத்தின் பகுதித் துண்டுகளும், பெண்கள் அணியும் கவுணின் ஒரு பகுதி மற்றும் எரிந்த ரயர்த் துண்டுகள், ரி - 56 ரைபிளுக்குரிய வெற்றுத் தோட்டாக்கள் நான்கு ஆகியவையும் கண்டெடுக்கப்பட்டன.

இதேவேளை —

இச்சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபராகக் கருதப்படும் உதவிப்பொலீஸ் அதிபர் சுமித் எதிரிசிங்காவை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கவேண்டாம் என்று கொழும்பு மேலதிக நீதிவான் சம்பக புத்திபால சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேற்று உத்தரவிட்டார்.

இப்பொலீஸ் அதிகாரியைக் கைது செய்யும்படி நீதிவான் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார். எனினும் அந்த உத்தரவு நேற்றுவரை நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் — நேற்று நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது இக் கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இன்னொரு பொலீஸ் அதிகாரியின் பெயரும் வெளியாகியது. அன்ரன் சிறிகுமார் என்ற அந்தப் பொலீஸ் அதிகாரி இப்போது கொழும்பு போக்குவரத்துப் பொலீஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி முட்டுக்கட்டையாக இருக்கின்றார்!

### அமைச்சர் இந்திகா குணவர்த்தனா குற்றச்சாட்டு

இனப்பிரச்சினை தொடர்பான சமரச முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி முட்டுக் கட்டையாக இருக்கிறார்.

கடற்றொழில் [illegible] வர்த்தனா மட்டக்களப்பில் [illegible] தரங்கு ஒன்றில் [illegible] முன்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளை [illegible] மேற்கொள்ள இன்று ஜனாதிபதியாக இருப்பவரை [illegible] அப்பதவிக்குத் தெரிவு [illegible] என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 'கோமாரி'யில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 6

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் ''கோமாரி'' கப்பலில் 235 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ். செயலகத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தபால் பொதிகள் நாளையே இறக்கப்பட்டு சனிக்கிழமை முதல் விநியோகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### கண்டியில் 400 பிக்குகள் உண்ணாவிரதம்

கொழும்பு. ஒக். 6

பௌத்த, பாளி பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்சங்கத்தைச் சேர்ந்த சுமார் 400 பௌத்த பிக்குகள் கண்டி தலதா மாளிகையின் முன்னால் நேற்று உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இரு பல்கலைக் கழகங்களையும் ஒன்றாக்கி, அதற்கு முறைப்படியான பல்கலைக் கழக அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று கோரியே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. (உ-6)

### ஜனாதிபதித் தேர்தல்:

## சந்திரிகா உட்பட நால்வர் கட்டுப்பணம் செலுத்தினர்

கொழும்பு, ஒக். 6

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக பிரதமர் சந்திரிகா உட்பட நான்கு வேட்பாளர்கள் நேற்று தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் தங்கள் கட்டுப் பணத்தைச் செலுத்தினர்.

அவர்களின் விவரம் வருமாறு:

★ பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

★ சுயேச்சை வேட்பாளராக முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்கா.

★ ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி வேட்பாளராக நிஹால் கலப்பதி.

★ சிங்கள மகா சம்பத பூமி புத்ர கட்சியின் வேட்பாளராக ஹரிச்சந்திரா விஜேதுங்க. (ஒ-எ-க)

### கொழும்பு மத்திக்கு

## ஐ. தே. க. அமைப்பாளர் ஹேமா பிரேமதாஸ!

கொழும்பு, ஒக். 6

ஹேமா பிரேமதாஸ கொழும்பு மத்தியின் ஐ. தே. க அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம் ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகராவினால் ஹேமாவுக்கு கடந்த திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

கட்சி அமைப்பாளர் பதவி கிடைப்பதற்கு முன்னரே தாம் அக்கட்சிக்கு ஆதரவு வழங்கி வருவதாக ஹேமா தெரிவித்தார். (ஒ-எ-6)

## ஐ. நா. சிறுவர் நிதியத்தின் அதிகாரிகள் யாழ். வருவர்

யாழ்ப்பாணம்,ஒக். 6

ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த 6 அதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

யாழ்.மாநகரசபைப் பகுதியில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறித்தும்—

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ள உள்ள அவசரத்திட்டங்கள் குறித்தும்-அவர்கள் ஆராய்வார்கள்.

இதேவேளை-நேற்று முன்தினம் கொழும்பில் அந்த அமைப்பு நடத்திய வருடாந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயப் பட்டதாகவும்—

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்.மாநகரசபை ஆணையாளர் திரு.வி.பி பாலசிங்கம் இங்கு மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து விபரமாக எடுத்து விளக்கினார் என்றும்-தெரிவிக்கப்பட்டது.

### கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 6

கிளாலி – பூநகரிப் படகுச் சேவைஇன்றுவியாழக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

### வேட்பு மனு நாளை தாக்கல்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்வது நாளை முற்பகல் இடம்பெறும். இந்நிகழ்ச்சியை ரூபவாஹினி நேரடியாக ஒளிபரப்புச் செய்யும்.

## லஞ்ச, ஊழல் விசாரணை சட்டமூலம் நிறைவேறியது

### மூன்றில் இரண்டு பெரும்பான்மை

கொழும்பு, ஒக். 6

லஞ்சம், ஊழல் ஆகிய வற்றை விசாரிப்பதற்கான சட்டமூலமும் லஞ்சத் திருத்தச் சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் நேற்று மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டன.

இந்தச் சட்டமூலங்களுக்கு ஆதரவாக சகல எம்.பிக்களும் வாக்களித்தனர்.

இது தொடர்பான விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் —

சம்பந்தப்பட்ட ஆணைக் குழுவுக்கு ஓய்வுபெற்ற நீதியரசர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் —

குற்ற விசாரணைகளில் ஏற்படும் தாமதங்களை நீக்குவதற்காக விசேட உயர்நீதி மன்றங்கள் நியமிக்கப்படும் என்றும்—தெரிவித்தார்.

இவ்விரு சட்டமூலங்கள் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நாடாளுமன்றில் முதன் முதலாக நிறைவேற்றப்பட்டவை ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## இரணவில சூட்டு சம்பவம்; அமைச்சர் மட்ட விசாரணை

### பிரதமர் சந்திரிகா உத்தரவு

புத்தளம் மாவட்டம் — இரணவிலவில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை நடத்தி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, பிரதிஅமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ ஆகியோரை பிரதமர் சந்திரிகா பணித்துள்ளார்.

பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதும் மூவர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே.

அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் அங்கு நிறுவப்படுவதை எதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே பொலீஸார் சுட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக புத்தளம் மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபரையும் சிரேஷ்ட பொலீஸ் அதிபரையும் உடனடியாக கொழும்புக்கு வரும்படி பொலீஸ்தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-எ-6)

### ஆணையாளர் அலுவலகத்தின் முன்

## உண்ணாவிரதம் இருந்த ஜே.வி.பி. பிரமுகர் கைது!

கொழும்பு, ஒக். 6

ஜே. வி. பியின் பொதுச் செயலாளராக சோமவன்ஸ அமரசிங்காவை தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்ததை ஆட்சேபித்து தேர்தல் ஆணையாளர் அலுவலகம் முன்பாக நேற்று முன்தினம் டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோ உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

தமது தலைமையிலான ஜே. வி. பியையே சட்டபூர்வமான ஜே. வி. பியாக அங்கீகரிக்கவேண்டும் என்று இவர் முன்னர் தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பித்திருந்தார்.

டாக்டர் பெர்னாண்டோ படுகொலையுண்ட ஜே. வி. பியின் தலைவர் றோஹண விஜேவீராவின் மைத்துனர் என்பது தெரிந்ததே. இவரின் சகோதரியையே றோஹண விஜேவீர திருமணம் செய்திருந்தார்.

நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதத்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ எந்தக் கட்சிக்கு ஆதரவு?

## இ.தொ.கா. இறுதி முடிவு எடுப்பது ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது என்பது குறித்து இ. தொ. கா. இன்னும் முடிவு எடுக்கவில்லை.

நேற்று முடிவு அறிவிக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் —

எதிர்வரும் 15 ஆம் திகதி இ. தொ. காவின் விசேட நிர்வாக சபைக் கூடி, இறுதி முடிவை அறிவிக்கும் என்று இ. தொ. காவின் அரசியல் பிரிவுத் துறைத் தலைவரும் முன்னாள் ராஜாங்க அமைச்சருமான திரு. பி. பி. தேவராஜ் தெரிவித்தார்.

இ. தொ. காவின் நிர்வாகக் குழுக்கூட்டம் நேற்று பிற்பகல் கொழும்பில் திரு. எஸ். தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்ற விஷயம் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. அதன் பின்னரே திரு. தேவராஜ் முன்கண்ட தகவலை வெளியிட்டார். (ஒ-எ)

## தென்மராட்சி உதவிப் பணம்

தென்மராட்சி, ஒக். 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஒக்டோபர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தென்மராட்சி பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவினரால் அந்தந்தப் பிரிவு தபால் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (இ-117)

# வீட்டு மின் இணைப்புகளை சீர் செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஒக். 6

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் தமது வீடுகளின் மின் இணைப்புகளை சீர்செய்து, சரிபார்த்து வைத்திடுமாறு யாழ். மாநகர மின் பொறியியலாளரும் பதில் ஆணையாளருமான திரு. வே. நவரத்தினராசா மக்களைக் கேட்டுள்ளார்.

நீண்ட காலமாக மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருப்பதால் வீட்டு மின் இணைப்புகள் கவனிப்பு இன்றி பழுதடைந்த நிலையில் இருக்கலாம். எனவே மக்கள் அதனைச் சீர்செய்து கொள்வது நல்லது.

யாழ். குடாநாட்டுக்கு சுழற்சி முறையில் மின் வழங்க மின்சார சபையினர் திட்டமிட்டு வருகின்றனர். அதற்கு முன்னேற்பாடாக மக்கள் தமது வீட்டு மின் இணைப்புகளை சீர் செய்து கொள்வது நல்லது. இதன் மூலம் கால விரயத்தையும் வீண் உயிர் ஆபத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

மாநகர சபைப் பகுதியில் வீதிகளில் உள்ள மின் கம்பிகள் செடி, கொடிகளாலும், மரங்களாலும் மூடிக்கிடக்கின்றன என்றும், எனவே அவற்றை அகற்றி மின் கம்பிகளைச் சீர் செய்வதற்கு உதவிடுமாறு மின் பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா யாழ். மாநகரப் பகுதி வாழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-17)

## பிரதேச செயலாளர் மீது ஊழல் குற்றம்

கொழும்பு, ஒக். 6

நாட்டில் உள்ள பிரதேசச் செயலாளர்களில் அறுபது பேரின் மீது ஊழல் மற்றும் முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட முன் கண்டவாறு தெரிவித்தார் (இ-எ)

## உழவு யந்திரம் குறைந்த விலையில்

கொழும்பு, ஒக். 6

உழவு இயந்திரங்களின் விலை குறைக்கப்படும் என்று விவசாய, காணி, வனவள அமைச்சர் டி. எம். ஜயரத்ன அறிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உழவு இயந்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார். (இ-எ)

## அமைப்புகளை பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், ஒக். 6

பொதுசனப் பிரதிநிதித்துவம் உடைய சகல மதசார்புள்ள, மதசார்பற்ற அமைப்புகளின் பதிவு செய்யும் இரண்டாவது கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தமிழீழ நிர்வாக சேவை அறிவித்துள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் முதற் கட்டப் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அறிவிக்கப்படுகிறது. (க)

## உலக ஆசிரியர் தினம் 1994

அறிவுப் பூக்கள் மலர்ந்திடும் பூங்காவை
ஆக்கித் தருபவர் ஆசிரியர்

யாழ். கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயத்தின் ரத்தினங்களான
அதிபர், ஆசிரியர்களை இந்நாளில்
வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாணவர்கள், பாடசாலை அபி. ச.,
பழைய மாணவர் சங்கம்,
யா/கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்.

[33216]

## யா\இராமநாதன் கல்லூரி

அனைத்துலக

## ஆசிரியர் தினம் - 1994

எண்ணும் எழுத்தும் கண்ணெனக்
கற்பித்தெம்மை வளர்ப்பவரை
கண்ணின் மணியாய் போற்றுவோம்
கருத்தில் நாளும் இருத்துவோம்.

மாணவர்கள்
யா இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்.

(சி/5726)

## யுத்த எதிர்ப்புக்கு மக்கள் ஆதரவு

கொழும்பு, ஒக். 6

கடந்த வாரம் நுகேகொடையில் நடந்த யுத்த எதிர்ப்புப் பிரசாரக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வாசுதேவ நாணயக்கார, தர்மசிறி பண்டாரநாயக்கா, கார்லோ பொன்சேகா, சொலுான் ராஜகருணாநாயக்க ஆகியோரின் யுத்த எதிர்ப்புப் பேச்சுக்களை மக்கள் கரகோஷம் செய்து வரவேற்றனர் என்று ''சண்டே ஒப்சேவர்'' தகவல் வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## கொதித்து ஆறிய தண்ணீர் பருகுமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக். 6

மழை காலம் ஆரம்பித்திருப்பதால் நோய்கள் பரவக் கூடும் என்றும் —

கொதித்து ஆறிய தண்ணீரை அருந்தும் படியும் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

நீரினால் வாந்திபேதி, கொலரா, காய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் பரவும்.

இவற்றை வராமல் தடுப்பதற்கு மக்கள் சுகாதாரத்தை கையாள வேண்டும்.

குடி தண்ணீரை கொதித்து ஆறிய பின்னர் பருகுதல் வேண்டும்.

உணவுப் பண்டங்களில் ஈக்கள் மொய்க்காதவாறு அவற்றைத் மூடி வைத்தல் வேண்டும்.

மலம் கழித்த பின்னர் சவர்க்காரம் போட்டு கையை கழுவுதல் வேண்டும்.

இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-17)

## காணவில்லை

### வை. ஜகபாலன்

12 வயது நிரம்பிய சிறுவன் ஜகபாலன் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாகியும் வீடுவரவில்லை. வெள்ளை நிறம், வட்டமுகம் கொண்ட இவர் கடைசியாக ரியூசனுக்குச் சென்றபோது சாம்பல் நிறக் காற்சட்டையும், மண்நிற, கறுப்பு பெட்டிகள் கொண்ட சேர்ட்டும், கறுப்பு தொப்பியும் அணிந்து, சிவப்பு புத்தகப்பையும் வைத்திருந்தார்.

இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கருணையுடன் அருகில் உள்ள காவல் பணிமனைக்கு தகவல் தருமாறு மிகப்பணிவுடன் வேண்டுகிறோம்.

வீரபத்திரர் லேன், கல்வியங்காடு. — எஸ். செல்வராஜா

(33220)

## ஆசிரியர்களுக்கு வாழ்த்து

சீரிய சமுதாயத்தின் சிற்பிகள் நல்லாசிரியர்களே.

எழுத்தறிவித்த ஆசான்களை இறைவனாகக் கணித்து மதித்துப் போற்றுவோம்.

தலைமைத்துவத்தை வளர்த்து மாணவர்களை தேச சேவைக்கு ஆற்றுப்படுத்தும் ஆசிரியமணிகளை —

அனைத்துலக ஆசிரியர் நாளாகிய இன்று பாராட்டி வாழ்த்துகிறோம்.

யாழ்.
றோட்டறிக் கழகம்

(சி/9282)

## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவன்
சி. ரதீஸ்குமாரின்
அன்புத் தந்தையார்
கார்த்திகேசு சிவலிங்கம் [வர்த்தகர்]

அவர்களின் மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1994 O/L மாணவர்கள்
யா/கலாநிதி ஆ. தியாகராஜா
மத்திய மகா வித்தியாலயம்
காரைநகர்.

(33217)

## தனது நிலை குறித்து அனுரா அறிக்கை

கொழும்பு, ஒக். 6

சுதந்திரக் கட்சியில் மீண்டும் சேர்வது குறித்து தாம் இன்னும் முடிவு செய்யவில்லை என்று அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

''விரைவில் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளேன்'' என்று அனுரா கொழும்புச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து திரும்பிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

# மூன்று லட்சம் பேருக்கு வெளிநாட்டு வேலை

## தொழில் அமைச்சர் திட்டம்

கொழும்பு, ஒக். 6

ஒரு வருட காலத்தினுள் மூன்று லட்சம் பேருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அனுமதி பிரதமர் சந்திரிகாவிடம் பெறப்படவிருப்பதாக தொழில் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியில் இருந்தும் 500 பேருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு வழங்கப்படும்.

இவ்வாய்ப்புகளை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளைத் தவிர, ஜப்பான் மற்றும் தாய்வான் ஆகிய ஆசிய நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் தொழில்வாய்ப்புகள் பெறப்படவுள்ளன.

தொழில் வாய்ப்புகள்பற்றி அறிந்து வருவதற்கு இந்த நாடுகளுக்கு அரசுத் தூதுக் குழுக்கள் அனுப்பப்படவுள்ளன என்று தொழில் அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு பற்றிய அரசின் கொள்கை மீளாய்வு செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## உலக ஆசிரிய தினம் 1994

நூற்றாண்டை கொண்டாடிக் கொண்டிருக்கும்
யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

''சேவைக்கு என்று தேய்ந்து மணக்கும்
சந்தனத்தருவே ஆசிரியர்''

சமுதாயத்தின் ஏற்றத்தில் ஏணிப்படிகளாக எமது கல்லூரியில் செயலாற்றிய, செயல்படுகின்ற தியாக சுடர்களாகிய ஆசிரிய பெருந்தகைகளை ஏற்றி போற்றி நன்றி கூறி வாழ்த்துகின்றோம்.

''வாழ்க ஆசிரியர் குழாம்
வளர்க அவர்தம் திருப்பணிகள்''

பழைய மாணவர் சங்கம்

(சி/9279)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
கந்தையா வடிவாம்பிகை
[வேலணை மேற்கு, வேலணை]

அன்னை மடியில்: 04 — 02 — 1927
கந்தன் கழலடியில்: 16 — 10 — 1993

திதி: 06 — 10 — 1994

அன்பு மழை பொழிந்து, அமுத மொழி பேசி, ஆசைக்கரம் நீட்டி, எங்களையெல்லாம் ஆளாக்கிய அருமையான அம்மாவே, பிரிவு இயற்கையானது. எங்களை நினைத்து வாழ்ந்த நீங்கள் எப்பொழுதும் எங்களையே சுற்றி நிற்பீர்கள். நோயும் பிணியும், உங்களை எங்களிடமிருந்து பிரித்தாலும், எம் இதயங்களில் நிலையாக நிற்கும் உங்கள் நினைவு ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும், எங்கள் உள்ளத்தில் என்றும் நிறைந்திருக்கும்.

எங்களை விட்டு மறைந்த உங்கள் ஆத்மா சாந்யடைய சிற்பனை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
க. மூர்த்தி (மகன்),
இல. 30,
கின்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

[33213]

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நீங்காத நினைவில்
ஒக்டோபர் - 6



திருமதி
பிலோமினம்மா
டானியல்
(மறைந்த மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் மனைவி)

பிறப்பு;
25 — 05 — 1931

இறப்பு;
06 — 10 — 1986

எமது நல்வாழ்வின் உயர்ச்சிக்காகவும், மறைந்த தங்கள் கணவரின் அரசியல், இலக்கிய சமுதாய உயர்ச்சிக்காகவும் உங்கள் கடமையைச் சரிவரச் செய்த உங்கள் பசுமையான நினைவுகள் எம்மனத்தில் என்றும் நிலைத்திருக்கின்றன.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'வசந்தம்'
76/2, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## கிராமிய சுகாதார ஊழியர்:

# மாநகரசபை பகுதியில் 29 பேருக்கு வேலை

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். மாநகரசபை, தேசிய பயிலுநர் சபையின் உதவியுடன் நடத்திய கிராமிய சுகாதார ஊழியர் பயிற்சி நெறியில் (1993/94) 52பயிலுநர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

இவர்களில் 29 பேர் மூலம் மாநகரசபைப்பகுதியில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இதற்கான உதவியை ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்கு ஐக்கிய நாடுகள்சிறுவர் நிதியம் வழங்கவுள்ளது.

மேலும், யாழ். மாநகர சபை தவிர்ந்த ஏனைய சுகாதாரப் பிரிவுகளுக்கு மீதமுள்ள தொகுதியினரை சேவைக்கு அமர்த்துவதற்கு அவ்வப்பகுதி சுகாதாரப் பிரிவுகளும்அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்பினால் யாழ். மாநகரசபையுடன் இணைந்து அதனைச் செய்ய முடியும்என்றும் —

இது சம்பந்தமாக யாழ். மாநகராட்சி சமூக சுகாதாரப் பயிற்சி நிலையத்துடன் தொடர்புகொள்ளும் படியும் அவர் கோரியுள்ளார். (க)

## முன் அறிவித்தல்

யா/சுன்னாகம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்க

# பொதுக் கூட்டம்

தலைவர்: திரு. வை. இராசையா
இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 30-10-1994 ஞாயிறு
நேரம்: காலை 9.00 மணி

1 1993/1994 ஆம் ஆண்டு சந்தாப் பணத்தை 14-10-1994 இற்கு முன்பதாக பொருளாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவும்.

2 மதிய போசனத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் 14-10-1994 இற்கு முன்பதாக பொருளாளரிடம் ரூபா 100/- செலுத்தி பற்றுச் சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

3 பிரேரணைகள் யாவும் 14-10-1994 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

4 பதிவுக்கான வேட்பு மனுக்களின் மாதிரிப் படிவத்தை கல்லூரி அறிவித்தல் பலகையில் பார்வையிட்டு அதன்படி தயாரித்து 11-10-1994 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

5 சகல ஆயுட்கால உறுப்பினர்களுக்கும் நடப்பாண்டு வரை சந்தாப்பணத்தைச் செலுத்திய உறுப்பினர்களுக்கும், மதிய போசனத்திற்கு பதிவு செய்தவர்களுக்கும் அதற்குரிய அனுமதி அட்டைகள் அஞ்சல் மூலம் அழைப்புடன் அனுப்பி வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

6 பொருளாளரைச் சந்திக்கச் சிரமம் ஏற்படுமிடத்து பணத்தை தலைவரிடமோ அல்லது செயலாளரிடமோ ஒப்படைக்கலாம். இவற்றின் பற்றுச்சீட்டுகள் பொருளாளரினால் வழங்கப்படும். தயவு செய்து தொடர்பு கொள்ளும் பொழுது தங்களது அங்கத்துவ இலக்கம், தற்போதைய பூரண முகவரி முதலியவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
வை. இராசையா,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

செயலாளர்
சேது. விபுலானந்தா
207, 211,
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

பொருளாளர்
ச. சிவனேஸ்வரன்,
இணுவில் தெற்கு,
சுன்னாகம்.

சேது. விபுலானந்தா
செயலாளர்

கந்தரோடை,
சுன்னாகம்.
06-10-1994

(சி/9280)

உ

## காமாட்சியம்பாள் இந்துபரிபாலன சபை

நீர்வேலி

## சமய பாடப் பரீட்சை - 1994

மேற்படி சபை நடத்திவரும் சமயபாடப் பரீட்சை 09-10-94 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நேரசூசி, சுட்டெண்கள் பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைச் செயலாளர்

(சி-5727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண ஐ.தே.க. போதுமான அளவு முயற்சி எடுக்கவில்லை

## தோல்விக்கு இதுவே காரணம் என்கிறார் டிரோன் பெர்னாண்டோ

கொழும்பு, ஒக். 6

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐ.தே.க. அரசு போதுமான முயற்சியை மேற்கொள்ளாததே அக்கட்சி கடந்த பொதுத் தேர்தலில் தோற்றதற்கு முக்கிய காரணமாகும்.

முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ முன்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக சந்திரிகா உறுதியளித்தார். மக்கள் அவரில் நம்பிக்கை வைத்தார்கள் என்றும் அவர் சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஐ.தே. கட்சியில் ஒழுங்கு, கட்டுப்பாடு இல்லாததுதான் அக்கட்சி அடைந்த தோல்விக்குக் காரணம் என்று ஜனாதிபதி விஜேதுங்க கூறியுள்ளாரே என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''அப்படி அவர் கூறுவதானால், கட்சியின் தலைவர் என்ற முறையில் அவரும் அதற்கு பொறுப்பு ஆகின்றார்'' என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைவர், தனது கட்சியின் முதுகில் குத்தியதுதான் கட்சி தோற்றதற்குக் காரணம் என்று சிறிசேன கூரே தெரிவித்த குற்றச்சாட்டுப் பற்றி கருத்து வெளியிடுகையில் —

''கட்சியின் தோல்விக்கு கூரேதான் முக்கிய காரணம். லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா போன்றோரை கட்சி பிரேமதாஸா காலத்தில் விலக்கியதற்கு கூரேதான் காரணம் என்றார்.

''கூரேயும், அனுராவும் தான் தென் மாகாணசபை உறுப்பினர் பிரான்ஸிஸ்குவை கடத்தி கொழும்புக்குக் கொண்டு வந்தனர்.

'அதனால்தான் தென் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க. தோல்வி அடைந்தது. கூரே மீது எனக்கு தனிப்பட்ட கோபமில்லை''— என்றும் பெர்னாண்டோ சொன்னார்.

அனுரா ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தது அக்கட்சிக்கு பாதகமாக முடிந்தது என்று சொன்ன அவர், அனுரா சுதந்திரக் கட்சியில் இருந்தால் அங்கு சீர்குலைவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பார் என்றும் தெரிவித்தார்.

அனுரா சுதந்திரக் கட்சிக்கு போகும் சாத்தியம் உண்டு என்று தெரிவித்த அவர், அப்படிச் செல்வது ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாக முடியும் என்றார்.

வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்ப்பதாக கூறிய அவர், அது குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றார்.

வடக்கு - கிழக்கு நெருக்கடியை தீர்க்க சந்திரிகா எடுத்துவரும் முயற்சியை பாராட்டுகின்றேன். நேர்மையான—பாரபட்சமற்ற— கவர்ச்சியான தலைவர் ஒருவர் நாட்டுக்குத் தேவைப்பட்டது. அந்த தேவையை அவர் நிறைவேற்றியுள்ளார்— என்றார் அவர். (இ—எ)

## மட்டக்களப்பில் சனியன்று துப்பாக்கி, ஷெல் சத்தங்கள்

கொழும்பு, ஒக். 6

கடந்த சனிக்கிழமை இரவு மட்டக்களப்பு நகரில் சரமாரியான துப்பாக்கி மற்றும் ஷெல் சத்தங்கள் கேட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு விமான நிலைய முகாம் பாதுகாப்புப் பிரதேசத்தில் இரவில் இளைஞர்கள் சிலரின் நடமாட்டம் காணப்பட்டதாகவும்—

அதனைத் தொடர்ந்தே துப்பாக்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் இரவு 9-35 மணி முதல் நள்ளிரவுவரை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிக்கொப்டர்களும் துப்பாக்கித் தாக்குதல்களை நடத்தின. மட்டக்களப்பு வாவியை நோக்கியே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உயிரிழப்பு மற்றும் சேதவிவரங்கள் வெளியாகவில்லை. (இ—எ)

## காமினியின் தொலைபேசி ஒற்றுக்கேட்கப்படுகிறது

### ஜனாதிபதியிடம் முறையீடு

கொழும்பு, ஒக் 6

தமது தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக்கேட்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திஸநாயக்கா ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிய முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதிகளை பிரதமருக்கும் பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கும் அவர் அனுப்பிவைத்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் கடைப்பிடிக்கவிருக்கும் பிரசார உத்திகளை அறிந்துகொள்ளுமுகமாக மாற்றுக் கட்சியினர் தமது தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்கின்றனர் என்று அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஒற்றுக்கேட்டல் விவகாரம் பற்றிய விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ—எ)

## தொண்டமான் வரவேற்பு

கொழும்பு, ஒக் 6

மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனை இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸில் சேர்த்துக் கொள்வதில் என்ன தவறு? எனக்கும் அவருக்கும் இடையில் கோபதாபம் கிடையாது.

இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் முன்கண்டவாறு ''சண்டே லீடர்'' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

''எந்த அரசியல் கட்சியையும் இ. தொ. காவுடன் இணைத்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைவேன்.

'இந்த அழைப்பு சந்திரசேகரனுக்கும்பொருந்தும், அவர் எம்முடன் சேரவிரும்பினால் அவரை சேர்த்துக் கொள்வதில் என்ன தவறு உண்டு?

''சில தினங்களுக்கு முன்பு ''லிப்ட்'' டில் சென்று கொண்டிருந்த போது நான் சந்திரசேகரனைச் சந்தித்தேன். நான் அவருடன் பேசினேன்—அவரும் பேசினார்'' — என்று அவர் தெரிவித்தார். (இ—எ)

## அனுராவிலகினால் ஐ.தே.க. வாக்குகள் அதிகரிக்குமாம்

கொழும்பு, ஒக் 6

அனுரா ஐ. தே.க விலிருந்து விலகி மீண்டும் சுதந்திரக் கட்சியில் சேர்வது ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஜனாதிபதி தேர்தலில் சாதகமானதாகவே இருக்கும் என்று ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

அனுரா விலகுவது பற்றிஅண்மையில் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திஸநாயக்கா தம்மைச் சந்தித்த ஐ.தே.க. எம். பீக்கள் சிலரிடம் கேட்டார் என்றும்—

அவர்களில் டாக்டர் ராஜிதா சேனரத்னாவைத் தவிர ஏனையோர், அனுரா சுதந்திரக்கட்சிக்கு மீண்டும் செல்வது ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்மையே அளிக்கும் என்று தெரிவித்தனர் என்றும் — சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ—எ)

## ஜனநாயக அரசியலில் ஜே. வி. பி. ஈடுபட முடியும்

### ஜனாதிபதி டி. பி. நம்பிக்கை

கொழும்பு, ஒக். 6

ஜே. வி. பி. ஜனநாயக அரசியலில் ஈடுபட முடியும் என்று ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

தம்மைச் சந்தித்த ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணித் தலைவர் ஆரிய புலேகொடவிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ருகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் தலைவர் ஒருவரை சிறையில் இருந்து விடுவிப்பது தொடர்பாக திரு. புலேகொட ஜனாதிபதியைச் சந்தித்தார்.

ஜே. வி. பி. நடவடிக்கை தொடர்பாக இந்த மாணவ தலைவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அந்த மாணவரை உடனடியாக விடுதலை செய்யும்படி ஜனாதிபதி உத்தரவிட்டதுடன், ஜனநாயக அரசியலில் ஜே. வி. பியினர் ஈடுபட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ—எ)

## தொண்டா- அஷ்ரப் தீர்வுத்திட்டம் பொ. ஐ. மு. அரசின் கவனத்துக்கு!

கொழும்பு, ஒக். 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் கூட்டாகத்தயாரித்து ஜனாதிபதி விஜேதுங்காவிடம் கையளித்த தீர்வுத் திட்டம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப் படவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளு மன்றத்தில் குழுக்களின் உப தலைவராக பணிபுரிபவருமான ஜனாப் ரவூப் ஹக்கீம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸ்— இ. தொ. கா. திட்டம் பற்றி பிரதமர் சந்திரிகாவுடன் தாம் பேச இருப்பதாக இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமானும் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுடன் இம்மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் பூர்வாங்கப் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு கொழும்பு திரும்பிய பின்னரே அரசுக் குழுவின் பிரதிநிதிகளுடன் இந்தத் தீர்வுத் திட்டத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றி முஸ்லிம் காங்கிரஸ் கலந்துரையாடும் என்று ஜனாப் ஹக்கீம் தெரிவித்தார்.

பிரதமருடன் பொருத்தமான நேரத்தில் முஸ்லிம் காங்கிரஸ்இந்தத் தீர்வுத் திட்டம் பற்றி பேசும் என்றும் அவர் கூறினார். (இ—எ)

## கிளாலி ஊடான படகுப் பயணத்துக்கு முன்னுரிமை பெறத் தகுதியானோர்

யாழ்ப்பாணம், ஒக். 6

கிளாலிப் படகு சேவையில் பிரயாணம் மேற்கொள்வதற்கு முன்னுரிமைக் கடிதம் பெறுவதற்குத் தகுதியானவர்கள் பற்றிய அறிவுறுத்தல் ஒன்றை தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் வெளியிட்டுள்ளார்.

1. அரச ஊழியர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு முன்னுரிமைக் கடிதம் வழங்கப்படமாட்டாது.

2. சொந்த அலுவல் காரணமாகப் பிரயாணம் மேற்கொள்ளும் அரச ஊழியர்களுக்கு முன்னுரிமைக் கடிதம் வழங்கப்படமாட்டாது.

3. யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்ல முன்னுரிமைக் கடிதம் வழங்கப்படும்.

4. அவ்வாறு உத்தியோக பூர்வமாகச் செல்வோர் அவர்களது திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்ற சிபார்சுக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்துமிடத்து அவர்களுக்கு முன்னுரிமைக் கடிதம் வழங்கப்படும்.

6. வெளிமாவட்டங்களில் பணிபுரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் எமது நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் பணிபுரிபவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களுக்கு முன்னுரிமைக் கடிதம் வழங்கப்படும். இதற்கு அந்தந்த மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் உறுதிப்படுத்திய கடிதம் பெற்றுவர வேண்டும்.

7. ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னுரிமைக் கடிதம் வழங்கப்படமாட்டாது. அவர்கள் தமிழீழ கல்விக் கழகத்தில் முன்னுரிமைக் கடிதம் பெற இயலும். (இ—க)

## சொந்த நலன்களைப் பேணும் சக்திகளின் விருப்பு - வெறுப்புக்கு செவிசாய்க்கக் கூடாது

### அரசு தற்கொலைப் பாதையில் செல்கிறது என்கிறார் ராஜரத்தினம்

கொழும்பு, ஒக். 6

சொந்த நிலையான நலன்களைப் பேணும் சக்திகளின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடர்ந்து செயற்படுமானால் எதிர்வரும் சமாதான பேச்சு வார்த்தைகள் நிச்சயம் தோல்வியடையும்; அத்துடன் பாதுகாப்பு நிலைவரமும் மோசமடையும்.

வழக்கறிஞர் ரி. சி. இராஜரத்தினம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளராகப் போட்டியிட்டவர் திரு. இராஜரத்தினம்.

இவர் வெளியிட்ட அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை அரசாங்கம் கைக்கொள்ளாவிடின் எதிர்வரும் சமாதானப் பேச்சுகள் தோல்வியடைவதுடன், என்றுமில்லாத முறையில் நாட்டின் பாதுகாப்பு நிலைவரமும் மோசமடையும்.

பேச்சுகள் துணிவுடன் நடத்தப்பட வேண்டும். அப்பேச்சுகள் கைக்கூலிகளைக் கொண்டு நடத்தப்படும் இரகசியப் பேச்சுகளாக இருக்கக் கூடாது.

எல்லாப் பொருள்களும் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டும். யுத்த நிறுத்தத்தை அரசு ஏற்படுத்த வேண்டும்.

பொறுப்பான, நல்ல அரசின் கடமை, பொருளாதார முற்றுகையை நீக்குவதாகும்.

ஆனால் இத் தடை தளர்த்தப்பட்டுத்தான் உள்ளது. வட பகுதி மக்கள் துன்பப்படுகின்றார்கள். யுத்தத்தினால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு அதற்குரிய முறையான, உகந்த நிலைவரம் இருக்க வேண்டும்.

அரசு தற்கொலைப் பயணத்துக்கான நடவடிக்கைகளையே மேற்கொள்ளுகின்றது. இது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

அரசின் இத்தற்கொலைப் பயணம் — கடைசிப் பயணமாக இருக்கலாம். இதன் பலனை நாடு தான் அனுபவிக்கப் போகிறது. இப்பயணம் நாட்டை ஏமாற்றப் போகிறது.

இந்த உத்தேச சமாதான நடைமுறையை மேற்கொள்வதற்காக கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஏற்பாடுகள் நிச்சயம் நாட்டை பணயம் வைப்பதாக உள்ளது.

இந்த ஏற்பாடுகள் குறித்து நான் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளேன்.

—இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ—எ)

## நேரம் பிந்திவரும் மாணவருக்கு அதிபர் வழங்கும் தண்டனை

### அமைச்சரிடம் முறையீடு

கொழும்பு ஒக். 6

பாடசாலைக்கு நேரம் பிந்திவரும் மாணவருக்கு புதுவிதமான தண்டனை வழங்கிய அதிபர் ஒருவர் பற்றி கல்வி அமைச்சர் ரிச்சாட்பதிரானாவிடம் முறையிடப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட பாடசாலை காலை 7-40க்குத்தான் ஆரம்பமாகிறது.

ஆனால் பாடசாலை அதிபரோ கதவுகளை 7-30 மணிக்குப் பூட்டி விடுவார். அதன் பின்னர் பாடசாலை வரும் மாணவர்கள் எல்லோரும் நேரம் பிந்தியவர்களாகக் கருதப்பட்டு, அதிபரின் வீட்டுக்குக் கூட்டிச் செல்லப்படுவர்.

அதிபரின் வீட்டைச் சுத்தம் செய்வது, வீட்டு வளவைத் துப்புரவு செய்வது, அவருக்குச் சொந்தமான ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டுவது, மாட்டுக் கொட்டில்களைத் துப்புரவு செய்வது போன்ற வேலைகளில் இம்மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நேரம் பிந்திப் பாடசாலை வரும் மாணவருக்கு அதிபர் வழங்கும் புதுவிதமான தண்டனை இது தான். (இ—எ)

## அனுராவின் இடம் திலக் மாரப்பனவுக்கு?

கொழும்பு, ஒக். 6

முன்னாள் சட்டமா அதிபர் திலக் மாரப்பனவை ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பியாக நியமிப்பதற்கு ஐ. தே. க. தலைமைப்பீடம் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. க. அரசின் கடைசிப் பகுதியில் ஜனாதிபதி விஜேதுங்காவின் முக்கிய ஆலோசகராக திரு. மாரப்பன செயல்பட்டு வந்தார்.

பிரேமதாஸா அரசு பதவி முடிந்த பின்னர், கொலைகார அரசியலில் இருந்து ஐ. தே. க. அரசை விடுவிப்பதில் முக்கிய பங்காற்றியவராக திரு. மாரப்பனவை ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

அனுரா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்யும் பட்சத்தில் அதனால் ஐ. தே. க. தேசியப்பட்டியலில் ஏற்படும் வெற்றிடத்துக்கு மாரப்பனவை நியமிப்பதையே பெரும்பாலான ஐ.தே. க.வின் எம். பிக்கள் விரும்புகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுராவின் இடத்துக்கு ஹேமா பிரேமதாஸாவை நியமிக்க ஐ. தே. க. தலைமைப்பீடம் முன்னர் திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ—எ)

## தொடர்ந்து பெய்த மழை: நெல் வயல்களில் வெள்ளம்

குடாநாட்டில் கடந்த சில நாட்களாகப் பெய்த கடும் மழை காரணமாக நெல் வயல்கள் பல இடங்களிலும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளம் வயல்களில் தேங்கியுள்ளதால் எதிர்பார்த்தபடி காலபோக நெற்செய்கையை ஆரம்பிக்க முடியாது போயுள்ளதாக விவசாயிகள் பலரும் கவலை தெரிவித்தனர்.

வெள்ளம் தேங்கிய வயல்களில் உழவு வேலைகளை ஆரம்பிக்க முடியாது பல விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

## இலவச மூக்கு கண்ணாடி

யாழ்ப்பாணம், ஒக். 6

நல்லூர் லயன்ஸ் கழகம் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை விநியோகிக்க உள்ளது.

கண் வைத்தியரின் அறிக்கை, கிராமசேவையாளரின் சிபார்சுக் கடிதம் ஆகியவற்றுடன் இலவச மூக்குக் கண்ணாடிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும்—

லயன்ஸ் கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

## ஐ. தே. கவின் 2 பிரசார பத்திரிகைகள்

கொழும்பு, ஒக். 6

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை நடத்துவதற்கு உதவியாக ஐக்கிய தேசியக் கட்சி ''பெரலிய'' ''விரோதய'' என்ற பெயர்களில் இரு வாரப் பத்திரிகைகளை வெளியிடவுள்ளது.

இதற்கான பொறுப்பு ஐ. தே. க. எம். பிக்களான ஜி. எம். பிரேமச்சந்திரா, டாக்டர் ராஜிதா சேனரத்தின, ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தொழுநோய் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். மாநகர சுகாதார பகுதியினரால் நடத்தப்படும் தொழுநோய் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று, இன்று வியாழன் பிற்பகல் 3 மணிக்கு [illegible] சென். நிக்கிலஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறும். (இ-17)

## கலாகேசரி தம்பித்துரையின் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 6

அண்மையில் காலமான காலகேசரி ஆ. தம்பித்துரையின் நினைவாக குரும்பசிட்டி சன்மார்க்கசபையினர் ஏற்பாடு செய்துள்ள நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதானார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சபைத் தலைவர் திரு. தி. குகானந்தன் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார்.

கலாகேசரியின் உருவப் படத்தை கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை திரைநீக்கம் செய்துவைத்து தொடக்கவுரையாற்றுவார்.

அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து நினைவுரை இடம்பெறும். நினைவுரையை ''எமது கலை மரபு'' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் நிகழ்த்துவார். (ஐ)

## கெனமனுக்கு 77 வயது

கொழும்பு, ஒக். 6

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பழம் பெரும் தலைவர்களில் ஒருவரான பீட்டர் கெனமன் கடந்த திங்கட்கிழமை தமது 77 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். (ஐ—எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**06 — 10 — 1994**

**வியாழன் இரவு**

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் ''நேரத்தை பொன் செய்'' குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிருவேங்கைகளின் 7ஆம் ஆண்டு நினைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின்தொகுப்பு

**07— 10 — 1994**

**வெள்ளி காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 —மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்.

## நான் இருந்திருந்தால் ஐ. தே. க. தோற்றிராது

### ஜே. ஆர். கூறுகிறார்

கொழும்பு, ஒக். 6

நான் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்திருப்பின் கடந்த பொதுத் தேர்தலில் இக்கட்சி தோற்றிருக்காது.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்கு பல காரணங்கள் உள்ளன. அவைபற்றி நான் பேசப்போவதில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் கட்சியின் தோல்வியை எப்படித் தவிர்த்திருப்பேன் என்று கூறுவது கஷ்டம் — என்றும் அவர் கூறினார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை கொண்டு வந்த 1978 அரசமைப்பு பற்றிக் கூறுகையில்—

''1952 இல் டி. எஸ். சேனநாயக்கா இறந்த பின்னர் பிரதமர் பதவிக்கு டட்லி சேனநாயக்கா, சேர்ஜோன் கொத்தலாவலை, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் முயற்சித்தனர். டட்லி பிரதமரானார். பின்னர் கொத்தலாவலை பிரதமரானார். பழைய அரசமைப்பின் கீழ் ஒருவர் இறந்தால் அடுத்தவர் யார் என்பது போட்டியில் முடிந்தது.

ஆனால் 1978 அரசமைப்பின் கீழ் பிரேமதாஸா கொல்லப்பட்டவுடன், அடுத்த பத்து நிமிடங்களில் புதிய ஜனாதிபதியை நியமிக்கக் கூடியதாகவிருந்தது.

''பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசும் ஐ. தே. க. ஜனாதிபதியும் ஒரே சமயத்தில் செயலாற்ற முடியும். அது கஷ்டமான காரியமல்ல''— என்றும் திரு. ஜெயவர்த்தனா தெரிவித்தார். (இ—எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

3 அங். 4 அங். எஸ்லோன் பைப்புகள், எனாமல் பெயின்ற் ரின்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், அலுமினியம் ஆப்ப தாச்சிகள், பொலித்தீன்தாள், சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், இல. 213C, கிட்டுசாலை, மருத்துவமனை விதி, யாழ்ப்பாணம். (33180)

7½ K.V. டைனமோவுடன் 17 H.P. ஜெனரேட்டர் லிஸ்டர் இயந்திரம் விற்பனைக்குண்டு. குறிப்பு 5 K.V. ஜெனரேட்டர் மாற்றி எடுப்பதென்றாலும் விரும்பத்தக்கது. செந்தாமரை (றிக்கோ), 370, மருத்துவமனை விதி, யாழ்ப்பாணம். (சி–9378)

**உடன் விற்பனைக்கு**

நல்லின பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. [12 நாட்கள் முடிந்தவை] தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டி பண்ணை, இராசவீதி, கோப்பாய். (சி–9265)

**புறொயிலர் விற்பனை**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், சேவல் கோழிகள், விறாத்து கோழிக்குஞ்சுகள், இறைச்சிக்கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (33188)

**கோழிக்குஞ்சு விற்பனை**

பத்து நாட்கள் நிரம்பிய Prima Hyline Brown சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. Prima Broiler குஞ்சுகள் பதிவு செய்து 8–10–94 சனிக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33192)

**வீடும், காணியும் விற்பனை**

அராலி றோட், சங்கானையில் 8 பரப்போடு வீடும், 15 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: V. N. பொன்னுத்துரை, அராலி றோட், கரந்தன், சங்கானை. (7664)

**ஆசிரியர் கைநூல்**

வினாத்தாள் தயாரித்தல், விடைத்தாள் பகுப்பாய்வு, மாதிரி வினாக்கள் – படிவங்கள் விளக்கங்கள் கொண்ட ஆண்டு 4—12 ஆசிரியர்க்கான ''மதிப்பீடு'' கைநூல் யாழ். ஸ்ரீசுப்பிரமணியம், ஸ்ரீலங்கா, சுன்னாகம் தனலக்குமி பொத்தக சோலைகளில் ரூபா 30/– மட்டுமே. (7665)

**மில்க்வைற் சலவைத்தூள்**

துணிகளின் சலவைக்கு மில்க்வைற் சலவைத்தூள். துரித சலவைக்கு, பளிச்சிடும் வெண்மைக்கு மில்க்வைற் சலவைத்தூள். வெற்றுப் பக்கற் 25க்கு ஒரு அப்பியாசக் கொப்பி. 100க்கு ஒரு கவர்ச்சியான கைலேஞ்சி. 500க்கு ஒரு துவாய் வழங்கப்படும். ''மில்க்வைற்'' (சி–9270)

---

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்''

**06 – 10 – 1994**

**சர்வதேச ஆசிரியர் தினத்தில்**

புத்தூர்

## ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரியின்

அதிபர், ஆசிரியர்களின் சேவையைப் போற்றி மன நிறைவோடு வாழ்த்துகின்றோம்,

இத்தினத்தை முன்னிட்டு இன்று பாடசாலையில் பொதுக்கூட்டம் – ஆசிரிய கௌரவிப்பு–கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும்.

— பாடசாலை அபிவிருத்திச் சபை.

சோமாஸ்கந்த கல்லூரி,
புத்தூர். (33187)

---

## உலக ஆசிரியர் தினம் 1994

உலக ஆசிரியர் தினமாகிய இன்று

**யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய**

அதிபர், ஆசிரியர்களின்

சேவையினை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

பெற்றோர், பழையமாணவர்,
நலன்விரும்பிகள்.

கைதடி. (33203)

---

ஆசிரியர்களே!

## நித்தம் நீர்செய்யும்நற்பணி ஓங்குக

மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்க
ஒத்திசை வாக மாணவர் எங்களைப்
பத்திர மாகப் பயன்பெற வைத்தீர்!
உத்தம ஆசிரியப்பணி ஏற்றுள
வித்தகர் உங்களின் தொண்டினைப் போற்றிடுவோம்
நித்தம் நீர் செய்யும் நற்பணி ஓங்குக!

உங்கள் சேவையை வேண்டி நிற்கும்:
கீழ்ப்படிவுள்ள,
**மத்திய கல்லூரி மாணவர்கள்.**

(சி–9274)

---

உ

கொக்குவில் கிழக்கு

**பொற்பதி விநாயகர் ஆலயம்**

# நவராத்திரி விழா

தொடர் சொற்பொழிவு

## ''மகாபாரதம்''

தினமும் மாலை 6-30 — 7-30 மணி வரை



நிகழ்த்துபவர்:
தமிழ்த்தேன்
செம்மொழிச் செல்வன்
**திரு. சிவ. மகாலிங்கம்**
B. A.
(விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை)

| | |
|---|---|
| 06 - 10 - 1994 | ஏகலைவன் குருபக்தி |
| 07 - 10 - 1994 | இராஜசூய யாகம் |
| 08 - 10 - 1994 | பாஞ்சாலியின் பிரபக்தி |
| 09 - 10 - 1994 | அருச்சுனன் சிவவழிபாடு |
| 10 - 10 - 1994 | பீமனும் ஆஞ்சநேயரும் |
| 11 - 10 - 1994 | கீசகன் மரணம் |
| 12 - 10 - 1994 | கிருஷ்ணன் தூது |
| 13 - 10 - 1994 | கீதா உபதேசம் |
| 14 - 10 - 1994 | தர்மத்தின் வெற்றி |

[33202]

---

# விவசாயிகளே!

**உங்கள் வயலை உழுது விளைவைப் பெருக்க**

- ✶ உழவிற்குத் தேவையான எரிபொருள்
- ✶ அடி உரம்
- ✶ விதை நெல்
- ✶ கிருமி நாசனிகள்

போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்:

**பசுமை வேளாண் சேவை**

| | | |
|---|---|---|
| ✶ கோப்பாய் | ✶ நல்லூர் | ✶ சாவகச்சேரி |
| ✶ உடுவில் | ✶ கோண்டாவில் | ✶ பளை |
| ✶ சண்டிலிப்பாய் | ✶ கைதடி | ✶ கொடிகாமம் |
| ✶ சங்கானை | ✶ கரவெட்டி | ✶ பருத்தித்துறை |

★ பசுமைப் புரட்சி தமிழீழத்தின் எழுச்சி ★

---

இந்துமத குருபீடாதிபதியை

## வாழ்த்துகிறோம்

இந்துமத குருமார்களினால் தலைமைக்குருவாக தெரிவுசெய்யப்பட்ட

குருபீடாதிபதி ''சிவாகமஞானி'' வித்யா ாகரம்

மறைதிரு

**Dr. ஸ்கந்த சாம்பசிவாச்சாரியார்**
D. A. M; M. D. H.

அவர்கள் முருகப்பெருமான் திருவருளால் பல்லாண்டு காலம் சமயப்பணி செய்ய வாழ்த்துகிறோம்.

குருபாதம் துணை.

தர்மகர்த்தாக்கள்
க. பொ. செல்வநாயகம்,
அ. க. சண்முகதாஸன்.

சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்,
வெல்வில், சங்கானை. (33197)

---

யாழ். கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்

## உலக ஆசிரியர் தினம்-1994

மேற்படி ஆசிரிய தினம் இன்று (06 – 10 – 94) வியாழன் காலை 9 மணிக்கு தொடங்கி வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திசபை, மாணவர்கள் ஆகியோரால் கொண்டாடப்படும்.

இத் தினத்தில் அதிபர் திரு. ஆ. சோதிலிங்கம் அவர்களையும், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.

வித்தியாலய. கொழும்புத்துறை சமூகம்.

(சி–9277)

---

# 4-ம் ஆண்டு நினைவலைகள்



**செல்வி யோகேஸ்வரி சதாசிவம்**
(சுரபி)

தோற்றம்: **08 — 11 — 1968**
மறைவு: **06 — 10 — 1990**

அணையாத தீபமாக
அனலை தீவுக் கரையினிலே புறப்பட்ட –
'சுரபியே'!

ஆழ் கடலில் மூழ்கி
ஆண்டுகள் நான்கு சென்றிடினும்
மறவோம் உன் நினைவை.

தகவல்;
— குடும்பத்தினர்.

லிங்கம் களஞ்சியம்,
இலுப்பையடி. (33199)

---

# 8 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்: 01 — 08 — 1927
மறைவு: 05 — 10 — 1986

தெல்லிப்பழை தந்தை செல்வா
தொடக்கப்பள்ளி அதிபர்

**உயர்திரு சின்னையா சிவலிங்கம்**
அவர்கள்

எங்கள் குடும்பத் தலைவனாயிருந்து, எம்மை ஆளாக்கிய எமது தந்தையின் 8ஆம் ஆண்டு நிறைவில் நினைது நெஞ்சத் தாமரையின் நினைவு எங்கள் உள்ளத்தில் என்றும் பிரகாசிக்கும்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

தெல்லிப்பழை. (33205)

---

# தொலைபேசி பயமுறுத்தல்; ரணசிங்க பதிவு செய்கிறார்

தமக்கு தொலை பேசி மூலம் வரும் அனாமதேய எச்சரிக்கை மற்றும் பயமுறுத்தல்களை எல்லாம் பதிவு செய்து வருவதாகவும்—

அவற்றை தமது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது செய்தியாளர் மா நாட்டில் ஒலிபரப்பவிருப்பதாகவும் முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்தார்.

''பாக்ஸ் மூலமும் பயமுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. தொலைபேசி மூலம் பயமுறுத்துபவர்களின் குரல்கள் எனக்குப் பழக்கப்பட்டவையாகும். ஐ. தே. க. யினரே அவர்கள் ஆவர். தேர்தல் பிரசாரத்தின் போது அவர்களின் பெயர்களை வெளியிடுவேன்''—என்றும் அவர் சொன்னார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிட விருப்பதாக திரு. ரணசிங்கா அறிவித்திருப்பது தெரிந்ததே.

---

முட்டையிடும் கோழிகள்

## விற்பனைக்கு

கைலன்ட் பிறவுண்—முட்டையிடத் தொடங்கி 5மாதம்
கைலன்ட் பிறவுண்—முட்டையிடத் தொடங்கி 12மாதம்
கைலன்ட் வைற் —முட்டையிடத் தொடங்கி 8மாதம்
நிரம்பிய முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு.

**வெள்ளிக்கிழமை 07 — 10 — 94 அன்று**

தொடர்பு கொள்ளவும்:
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி/9276)

---

கொக்குவில் இந்துக் கல்லூரி

# வாழ்த்துகின்றது

உலக ஆசிரியர் தினமாகிய இன்று புனிதமான கல்விச் சேவையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் சேவை செய்து வரும் எமது மதிப்பிற்குரிய பின்வரும் ஆசிரிய இரத்தினங்களை வாழ்த்துகின்றோம்

01. திரு. இ. மகேந்திரன் அதிபர் அவர்கள்
02. திரு. த. தேவராசா பிரதி அதிபர் அவர்கள்
03. திரு. மா. குலசேகரம் பிரதி அதிபர் அவர்கள்
04. திரு. த. கணேசபிள்ளை பிரதி அதிபர் அவர்கள்
05. திருமதி ப. சண்முகரத்தினம் ஆசிரியை அவர்கள்
06. திருமதி இ. அழகரத்தினம் ஆசிரியை அவர்கள்
07. திருமதி இ. சண்முகலிங்கம் ஆசிரியை அவர்கள்
08. திருமதி சி. குணரட்ணம் ஆசிரியை அவர்கள்
09. திருமதி நா. மதனசுரேந்திரன் ஆசிரியை அவர்கள்
10. திரு. இ. அரசரத்தினம் அலுவலக இலிகிதர் அவர்கள்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்,
பெற்றோர், பழைய மாணவர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி.
06 – 10 – 1994 [சி–9385]

---

# BASIC ENGLISH

ஆங்கிலத்தை பிழையின்றி எழுதவும், சரளமாக உரையாடவும் உகந்த பயிற்சி நெறி.

திங்கள், புதன், வெள்ளி தினங்களில்
2 - 30 — 3 - 30

by a well ex erienced Teacher

ஆரம்பம்: 10 - 10 - 94

For Furth r Details:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd CROSS ST
JAFFNA. (சி/9278)

---

## வாழ்த்துகிறோம்

யா / யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் மேம்பாட்டிற்காக உழைக்கும் அனைத்து ஆசிரியர்களையும்

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சகல சீரும் சிறப்பும் பெற்று தமது பெரும் பணியைத் தொடர வாழ்த்துகிறோம்

**மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள்,**
யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [33211]

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அரச ஒய்வூதியர் சங்க செயலாளர்

திரு. க. சி. நமசிவாயம்
அவர்களின் மனைவி

**திருமதி லோகேஸ்வரியின்**

மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

**யாழ். மாவட்ட அரச ஒய்வூதியர் சங்கம்.**

392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (33208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## ஆசிரியர் நாள்

மாதா, பிதா, குரு தெய்வம்; அவர் மலரடி நிதம் நிதம் வணங்குதல் செய்வோம்— என்பது கீழைத்தேசத்தவர் மரபு. ஆண்டவனுக்கு அடுத்தவராக ஆசானை மதித்தும், போற்றியும், கீழ்ப்படிந்து நடக்கும் பண்பு தமிழர்களுடையது. தமிழர்களுடைய பாரம்பரிய கல்விமரபு குரு-சிஷ்ய முறையிலேயே அமைந்திருந்தது. ஆகப் பிந்திய இன்னைப் பள்ளிக்கூட முறையில் கூட சிறுவர்கள், இளைஞர்களின் அறிவொளியாக மட்டுமன்றி வாழ்க்கை வழிகாட்டிகளாகவும் திகழ்ந்தவர்கள் ஆசிரியர்களே.

அதனால் அக்காலத்திலேயே தமது ஆசிரியர்களை மதித்தும், போற்றியும், மகிமைப்படுத்தியும் வரும் பழக்கம் தமிழர்களிடையே வேரூன்றி இருந்தது. வகுப்பறைக் கல்விமுறை நடைமுறைக்கு வந்த பின்னரும், பாடசாலைக் காலத்திலும் சரி, பாடசாலையை விட்டு நீங்கிய பின்னரும் சரி ஏன், தமது முதுமைப்பருவத்திலும் கூட, தமக்கு அறிவு தந்து உயர்த்திய ஆசிரியனை வாழ்க்கை முழுவதும் மதித்தும், போற்றியும், நன்றிக்கடன் செலுத்தும் பழக்கம் நீண்ட காலமாகவே எம்மிடையே நிலவி வந்தது.

அந்த நற்பண்பும் மரபும் கடந்த சுமார் கால் நூற்றாண்டு காலத்தில் அற்றுப் போய்விட்டமை கவலைக்குரியதாகும். இதனைச் சந்ததி மாற்றத்தின் அல்லது சந்ததி இடைவெளியின் விளைவு என்று நோக்குவாரும் உளர்.

சந்ததி இடைவெளி காரணமாக, அல்லது கால ஓட்டத்தின் வேகத்தில் ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பதையும் அவர்களைக் கௌரவிப்பதையும் மறந்துவிட வேண்டும்; அல்லது கைவிட்டு விட வேண்டும் என்பது பொருத்தமற்றது.

ஆசிரியர் நாளைக் கொண்டாடி வருடத்தில் ஒருநாள் அவர்களைச் சிறப்பிப்பதால் ஆசிரியரின் சமூக அந்தஸ்து உயர்ந்து விடாது. ஒவ்வொரு மாணவனும் தனது அறிவுக் கண்ணைத் திறந்து உலகத்தைக் காட்டிய ஆசிரியனை தனது வாழ்நாள் முழுவதிலும் தன்னை விட உயர்த்திப் பார்த்து, மதிப்பளித்து, கௌரவித்து, உதவவேண்டிய வேளை உதவி, நன்றிக் கடன் செலுத்த வேண்டும்.

எழுத்தறிவித்தவனை இறைவனாக மதிக்கப் பழகிய தமிழர் சமுதாயம், ஆசிரியர்களை மதித்து நன்றிக் கடன் செய்யும் பண்பை மீண்டும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மகன் சான்றோன் எனக் கேட்ட "தாய் ஈன்ற பொழுதினைவிடப் பெரிதுவப்பது போல, தனது மாணவன் வாழ்க்கையில் பெரியவனாகி நிற்பதனைக் கண்டு அதனைத் தனது சொந்த உயர்ச்சியாகக் கருதி மனதுக்குள் குதூகலிப்பவன் ஆசிரியன். தான் கற்பித்த மாணவன் சமூகத்தில் உயர்ந்து நிற்கிறான், நல்வாழ்வு நடத்துகிறான் என்பதே ஆசிரியனின் ஆத்ம திருப்தியாகிறது. எனவே அவனுக்கு மதிப்பளிப்பதும், நன்றி பாராட்டுவதும், உதவுவதும் ஒரு மாணவனின் பிறவிக் கடன் எனின் தவறன்று.

சமூகத்தைச் சிருஷ்டிப்பவனே ஆசிரியன்தான். ஆனால் அந்த ஆசிரியன் மாணவனுக்கு முன்னுதாரணமாக, சான்றோனாக, நற்பண்பாளனாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவனாக, நற்குணங்கள் உடையவனாக, நல்லாசிரியனாகத் திகழ்ந்தால் மட்டுமே தனக்குரிய மதிப்பைப் பெறமுடியும்.

நவீன உலகில், நற்பண்புள்ள சமுதாயத்தின் சிற்பி தாமே என்பதனை உணர்ந்து ஆசிரியர்கள் தமது கடமைகளைப் பொறுப்புணர்ந்து செய்தால் தமக்குரிய மதிப்பை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர் — மாணவன் — சமூகம் என்ற முத்தரப்பினர் உறவு பலமடைந்தால் மட்டுமே தர்மம், நீதி, நேர்மை, அர்ப்பணிப்பு ஆகிய நற்பண்பு கொண்ட சமுதாயத்தை எதிர்காலத்தில் கட்டி எழுப்ப முடியும்.

# மக்களின் வெறுப்புணர்வைப் போக்கி சமஷ்டி ஆட்சியை உருவாக்குவோம்!

## ஜனாதிபதி வேட்பாளர் ஏ. ஜே. ரணசிங்கா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 6

சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில்காணப்படும் வெறுப்புணர்வுக்கு முடிவு கட்டவும், நாட்டில் சமஷ்டி முறையிலான அரசாங்கத்தை உருவாக்கவும் விரும்புவதாக முன்னாள் தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவுள்ள அவர், நேற்று இலங்கை வானொலிக்கு கருத்து வெளியிடுகையில் முன்கண்டவாறு கூறினார்.

பகுப்பு ஒற்றுமை பொருளாதார அபிவிருத்தி, வன்செயலும் வெறுப்பும் இல்லாத சுதந்திர சமூகம் ஆகியவற்றைத் தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்த அவர், திருமதி ஹேமா பிரேமதாசவும், அவரது புதல்வரும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கக் கூடாது என்றும் தெரிவித்தார்.

திருமதி ஹேமா பிரேமதாசவின் தவறுகளைச் சுட்டிக் காட்டப் போதுமான விடயங்கள் தம்மிடம் இருப்பதாகவும்அவர் தெரிவித்தார்.

தென்பகுதி மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் ஏ. ஜே. ரணசிங்கா மேலும் கூறினார்.

## அராலியில் பொதுச் சந்தை அமைப்பதற்கு கோரிக்கை

அராலி, ஒக். 6

அராலி கிராமத்தில் பொதுச் சந்தை ஒன்றை அமைத்திட உதவுமாறு அப்பகுதி மக்கள் வலி மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தப் பகுதி விவசாயிகளால் உற்பத்தி செய்யபடும் மரக்கறிகள் மற்றும் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் என்பவற்றை அப்பகுதி மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்வதற்கு வசதியாகவே பொதுச் சந்தை ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

மக்களின் இந்தக் கோரிக்கையை அடுத்து சந்தை அமைப்பதற்கான நிலப்பகுதி ஒன்றைத் தெரிவு செய்யுமாறு வலி மேற்கு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி எஸ். கைலாயநாதன் அப்பகுதி கிராம உத்தியோகத்தரைக் கேட்டுள்ளார். (ஐ-12)

# வடக்கு- கிழக்குக்கு எல்லாளன் என்ற பெயரில் தனி சமஷ்டி மாநிலம்

## ரெலோ அமைப்பு யோசனை

கொழும்பு, ஒக். 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்த நாட்டில் ஐந்து சமஷ்டி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று ரெலோ அமைப்பு யோசனை தெரிவித்துள்ளது.

எல்லாளன் என்ற பெயரில் வடக்கு - கிழக்கு ஒரு மாநிலமாக அமைய வேண்டும் என்றும் —

அதன் தலைநகரமாக திருகோணமலை இருக்க வேண்டும் என்றும் — அந்த யோசனையில் ரெலோ செயலாளர் எம். சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்கு, வடமேற்கு மாகாணங்களை உள்ளடக்கி, ஸ்ரீஜெயவர்த்தனபுரவைத் தலைநகராகக் கொண்டு மாயரட்ட,

அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு வடமத்திய மாகாணத்தை உள்ளடக்கியதாக ராஜரட்ட,

கண்டியைத் தலைநகராகக் கொண்டு மத்திய, சப்ரகமுவ மாகாணங்களை உள்ளடக்கியதாக உடரட்ட,

மாத்தறையை தலைநகராகக் கொண்டு தென்மாகாணம் மற்றும் மொனறாகலை மாவட்டத்தை உள்ளடக்கியதாக றுகுணு ரட்ட— ஆகிய பெயர்களில் ஏனைய மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று அந்த யோசனையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகள் வடக்கு-கிழக்கு மாநிலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகள் மற்றும் அரச சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு இனவிகிதாசார அடிப்படையிலும் —

மீளக்குடியமர்வுத் திட்டங்கள் 1953ஆம் ஆண்டின் இனவிகிதாசார அடிப்படையிலும் — இடம்பெற வேண்டும் என்றும் அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# கொழும்பில் தமிழரிடம் பணம் பறித்த நபர்

## லஞ்ச வலையில் சிக்கினார்

கொழும்பு, ஒக். 6

கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள வடக்கு - கிழக்குத் தமிழர்களிடம் தாம் இரகசியப் பொலீஸ் அதிகாரி என்று கூறி பணம் பறித்து வந்ததாக கூறப்படும் நபர் ஒருவரை, லஞ்சத்திணைக்கள அதிகாரிகள் கடந்த வாரம் கையும் மெய்யுமாக பிடித்தனர்.

அவர் கைதான போது அவரிடம் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரின் கையெழுத்துடனான கடிதம் ஒன்று இருந்தது.

கொழும்பு விடுதி ஒன்றில் தங்கியிருந்த தமிழர் ஒருவரிடம் லஞ்சமாக முதலில் 2 ஆயிரம் ரூபாவைப் பெற்றுவிட்டு, மிகுதிப் பணமாக 8 ஆயிரம் ரூபாவை பெறச் சென்ற போதே அந்த நபர் கைதுசெய்யப்பட்டார். (இ-எ)

## விவசாயிகளின் வசதி கருதி

# கமநல சேவை நிலையங்கள் முழு நாளும் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்கள் விவசாயிகளின் நன்மை கருதி கிழமை நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 5 மணி வரையும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8-30 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் திறந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டது.

பெரும்போக நெற்செய்கைக்கு தேவையான உள்ளீட்டுப் பொருள்களை விவசாயிகள் சிரமமின்றிப் பெற்றுக் கொள்ள வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திரு. க. சுந்தரேசன் தெரிவித்தார்.

கமநல சேவை நிலையங்களில் வி-1 அடி உரம், அமோனியா, ரி. எஸ். பி., எம். ஓ. பி. போன்ற உரங்களை விவசாயிகள் தமக்குத் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

# 'ஹபரண' கப்பலில் எடுத்துவரப்பட்ட உரம் பழைய விலைக்கே விற்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 6

'ஹபரண' கப்பலில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கென கமநல சேவைகள் திணைக்களத்தால் எடுத்துவரப்பட்ட உரத்திற்கு உரமானியம் வழங்கப்படமாட்டாது.

விவசாய காணி அமைச்சின் செயலாளர் டிக்சன் நிலவீர யாழ். அரச அதிபருக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரத்திற்கு 30 சதவீத உரமானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் உரத்திற்கே இந்த உரமானியம் வழங்கப்படும் என்று விவசாய காணி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

'ஹபரண' கப்பலில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்ட உரத்திற்கு உரமானியம் வழங்குமாறு யாழ். அரச அதிபர் விவசாய காணி அமைச்சிடம் கோரி இருந்தார். (இ-4)

## வல்லைபால போக்குவரத்து

திருத்த வேலைகளுக்காக ஞாயிறன்று மூடப்பட்டிருந்த வல்லைப்பாலம் ஊடான போக்குவரத்துக்கள் திங்கள் முதல் மீண்டும் ஆரம்பமாகின. (இ-155)

# ஐ. தே. க. தலைமைத்துவம் என்றும் பரிசுத்தமாகவே இருந்து வருகிறது

## நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 6

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் என்றும் பரிசுத்தமாகவே இருந்து வருகிறது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எமது வேட்பாளர் காமினி திஸநாயக்காவும் பரிசுத்தமான ஒரு தலைவரே"

ஜனாதிபதி விஜேதுங்கா ஐ. தே. க. நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

காமினியை ஐ. தே. க. சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது என்ற முடிவு இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு. விஜேதுங்க நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாக்க ஐ. தே. க. திடசங்கற்பம் பூண்டுள்ளது— என்றார்.

திரு. காமினி திஸநாயக்கா பேசும் போது — துப்பாக்கிக் குண்டுகளை தாம் சந்தித்திருப்பதாக தெரிவித்தார்.

டட்லி சேனநாயக்கா போன்று லலித் அத்துலத்முதலியின் மறைவின் பின்னர் தாம் தனித்து விட்டதாகத் தெரிவித்தார்.

"நண்பர்களிடமிருந்து விலகி விட்டேன். எனது கைகளில் இரத்தக் கறை படியவில்லை. எனது கைகள் பரிசுத்தமானவை" —என்றும் காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (ஐ-எ)

# மாத அலவன்ஸாக 3 ஆயிரம் ரூபா வழங்குமாறு டாக்டர்கள் கோரிக்கை

அரசுப்பணியில் உள்ள டாக்டர்களுக்கு மாதம் 3ஆயிரம் ரூபா அலவன்ஸாக வழங்கப்படவேண்டும் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாகவும் சங்கம் எச்சரித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கைக்கான காலக்கெடு விதிக்கப்படவில்லை என்று சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

காலத்துக்காலம் பதவியில் இருந்த அரசுகள் இது பற்றி உறுதியளித்து வந்தன. ஆனால் அதனை நிறைவேற்றவில்லை என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தூதுக்குழு ஒன்று கடந்த வாரம் சுகாதார அமைச்சர் ஏ. எச். எம் பௌஸியைச் சந்தித்து, இக்கோரிக்கை பற்றிப் பேசியது.

இவ்விஷயம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதா அமைச்சர் பௌஸி சங்கத்தூதுக்குழுவிடம் தெரிவித்தார். (ஐ-எ)

# உறுதியுடனும் உளநிறைவுடனும் ஆசிரியர்கள் பணி தொடரட்டும்!

*தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வாண்மை அபிவிருத்திக் குழுவினால் வெளியிடப்படும் "விளக்கு" சஞ்சிகையின் உலக ஆசிரியர் நாள் செய்தி இது.*

எம்மைப் படைத்த இறைவனின் புகழைப் 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்று சொல்வார்கள்.

எமக்கு எழுத்தறிவித்த இறைவனாகிய ஆசிரியரின் சேவையைப் புகழாத நாளெல்லாம் பிறவா நாளே என்று சொல்வதும் பொருத்தமாகும்.

இறைவன் தன் "ஒருமை" யால் எங்கும் நிறைந்தவனாய், எல்லாம் அறிந்தவனாய் எல்லாம் வல்லவனாய், ஒளிர்கின்றான்.

ஆசிரியர்கள் தம் 'பன்மை' யால் எங்கும் நிறைந்தவராய், எல்லாம் அறிந்தவராய், எல்லாம் வல்லவராய் விளங்குகின்றார்கள்.

இறைவன் படைத்த குழந்தைகளுக்கு அறிவுக் கண்ணைக் கொடுத்து, ஞான ஒளி பாய்ச்சி, வாழ்வாங்கு வாழவைத்து மீண்டும், இறைவனைக் காட்டுபவர்கள் ஆசிரியர்கள்.

எதிர்கால உலகம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர்கள் ஆசிரியர்களே. ஏனெனில், இன்றைய மாணவர்களே நாளைய உலகினர்.

தம் அறிவுப் போதனையால் அறிஞர்கள், ஆய்வாளர்கள், அதிகாரிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் போன்றோரையும் —

தம் அறநெறிப் போதனையால் சமூகத் தொண்டர்கள், தலைவர்கள், தியாகிகள், சமயவாதிகள், எழுத்தாளர்கள் போன்றோரையும் உருவாக்கும் ஆசிரியர்கள் —

தம் நல்லொழுக்கச் சார்தனையால், தர்மம், நீதி, நேர்மை, அ[illegible] பணிப்பு, பொறுமை, தேச பக்தி, தெய்வப[illegible] உயர்பண்புகளின் அடிப்படையில் சிந்தனை, —சொல் - செயல் ஆகியவற்றை உருவாக்குவதற்கு மேற்கூறிய அனைத்துப் பிரிவினரையும் தூண்டக் கூடிய நிலையிலும் உள்ளனர்.

போரும் பூசலும் அற்ற, அடக்குமுறையும் ஒடுக்குமுறையுமற்ற ஓர் உலகை, சமத்துவமும், சகோதரத்துவமும், சமாதானமும், சந்தோஷமும் கோலோச்சும் ஓர் உலகை உருவாக்க ஆசிரியர்களாலேயே முடியும்.

யானை தன் பலத்தை உணராதிருப்பதைப் போன்று, ஆசிரியர்களும் தம் சக்தியை உணராதிருக்கின்றனர்.

ஆசிரியர்களின் ஆற்றலை அவர்கட்குணர்த்தி, அவர்களின் வாண்மையை வளர்த்து, அவர்கள் வரித்துக் கொண்ட பணியை உறுதியுடனும் உற்சாகத்துடனும் உளநிறைவுடனும் தொடர, அகில உலக ஆசிரியர் நாள் [illegible] தூண்டும் [illegible]

★

## மாலை வரவேற்பா!

எண்ணும் எழுத்தும் கண்ணென்பர்
எமது ஆசான் இறையென்பர்
பண்பும் பயனும் அதுவென்பர்
பாரிற் கல்வி மேலென்பர்

சொல்லும் செயலும் ஒன்றென்பர்
சோம்பல் அகற்றல் உயர்வென்பர்
கல்வி ஒழுக்கம் காணென்பர்
கடிந்தால் எதிரி குருவென்பர்

போற்றும் நாளே ஒக்ரோபர்
புனித தினமே ஆறென்பர்
ஏற்றம் கல்வி ஒழுக்கமதில்
இலக்குக் காண்பது கடனென்பர்
ஆற்றுஞ் சேவை அரனென்போர்க்கு
ஆற்றார் மதிப்பு ஆசாற்குத்
தூற்றும் வார்த்தைத் தொல்லைகளால்
தொடுப்பர் மாலை வரவேற்பா!

- வை. க. தவமணிதாசன்.

## ஆசிரியர்களை வாழ்த்துவோம்!

- எடுப்பு -

ஆசிரியர் வாழ்க என்று வாழ்த்துக் கூறுவோம் – அவர்
போதனைகள் கேட்டுக் கல்விப் புலமை எய்துவோம்
(ஆசிரியர்)

- தொடுப்பு -

தேசு பெற்றுச் சமூக வாழ்வு சிறக்கச் செய்குவோம் – திரு
சேரும் ஞானத் தெளிவினோடு செயல்கள் நாட்டுவோம்
(ஆசிரியர்)

- முடிப்பு -

கூரும் அன்பு கொண்டு எங்கள் குருவைப் போற்றுவோம் – குணம்
கொண்டு நல்ல ஒழுக்கம் பண்பு கூட்டி வாழுவோம்
தேரும் மிக்க அறிவு ஆற்றல் திறன்கள் தீட்டுவோம் – தினம்
செய்யும் பணிகள் உய்யும் வகையில் செய்து காட்டுவோம்
(ஆசிரியர்)

எங்கள் இனமும் மொழியும் எல்லாம் எய்தி வாழவே – எழில்
பொங்கு கின்ற மண்ணின் உரிமை எமது ஆக்குவோம்
இங்கு மக்கள் எல்லாம் சமமாய் என்றும் சூழவே – எமக்
கேற்ற நல்ல ஆட்சி ஒன்றை நாட்டிப் போற்றுவோம்
(ஆசிரியர்)

- முருகனடியான்.

## அடி பணிந்து வணங்கிடுவோம்!

கண்ணுடையர் கற்றவராம்
என மொழியும் வாசகத்தை
உண்மையிலே உலகுக்கு
உணர்த்துபவர் ஆசிரியர்
கல்விச் சுரங்கம்
கரையற்ற தென்பதனால்
அள்ளி எடுத்து
அமுதமெனக் கொடுத்து
வையம் உய்யும் வழிகாட்டும்
உத்தமராம் ஆசிரியர்
அவர் சொல்லும் இனிய மொழி
சுந்தரச் செந்தமிழாம்.

★

விஞ்ஞான மேதைகளை
உருவாக்கும் ஆசிரியர்
கணிதம், பௌதிகம், கணனி
மற்றும் கலங்களினால்
அமையும் உடலியற்
கூறுகளைக் கூறிடுவோன்
பொருளியலும், புவியியலும்
போதனையில் வாழ வைப்பேன்
அருளியலும், ஆன்மீகமும்
ஆங்கிலமும் அழகுறவே
செப்பிடுவோன்
கடுமை மிகுந்தும் காருண்யம்
தனிமிகுந்தும் மாணவர்
அருமை தெரிந்தும்
அன்பாய் கற்ப்பிப்பார்
அவரே நல்லாசிரியன்

★

புத்துலகச் சிற்பிகளை
புரிந்துணர்வு பொங்கி எழ
கற்பகம் போல் கல்விதனை
வழங்கும் கருத்தினரை
ஒப்புவமையில்லா
உயர் தொழிலில் நிற்பவரை
அற்புதமாய் வாழ்த்தி
அடி பணிந்து
வணங்கிடுவோம்!

சு. பா. காசிநாதன் (பி. ஏ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா இராசேந்திரம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பையா இராசேந்திரம் 4-10-94 இல் காலமானார்.

இவர் எலிசபெத் செல்லம்மாவின் அன்புக் கணவரும், வசந்தி (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி), ரவீந்திரமோகன் (தென்னிந்தியத் திருச்சபை, மாங்குளம்), சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பற்றிக் பாலராஜா (ஆசிரியர், சென் பற்றிக்ஸ் கல்லூரி அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
எஸ். பற்றிக் பாலராஜா
(மருமகன்)

கல்லூரி ஒழுங்கை,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.
(33218)

## சிவசம்பு கருணாநிதி

(Retired Officer — PWD)

காங்கேசன்துறை காட்டடைப்பு வீதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் அம்மன் கோவிலடியில் வசித்து வந்தவருமான சிவசம்பு கருணாநிதி நேற்றுக் (5-10-94) காலமானார்.

அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும், கருணானந்தன, கருணாவதி, மகானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரமலர், பாலசுந்தரம், திலகவதி ஆகியோரின் மாமனாரும் இளங்குமரன், கல்யாணி திருக்குமரன், கலைவாணி, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் "சிவா" கோண்டாவில் மேற்கில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. பாலசுந்தரம்
(மருமகன்)

"சிவா"
கோண்டாவில் மேற்கு.
(33215)

## சிவலை- சதாசிவம்

அரியாலை மேற்கு கலைமகள் வீதியைச் சேர்ந்த சிவலை - சதாசிவம் 4- 10- 1994 இல் காலமானார்.

இவர் யோகம்மாவின் (மாணிக்கம்) அன்புக் கணவரும், அற்புதசிகாமணி (சிகாமணி- கடல் கடந்த தொலைதொடர்பு ஸ்தாபனம், கொழும்பு), இலக்குமணதாசன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், ரஞ்சினிதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரளா, செந்தூரன், அருன், மேனன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற ஏரம்பு, வேலுப்பிள்ளை, திருமதி கோபாலன் சின்னம்மா, முருகேசு (இ. மி. ச. இளைப்பாறிய உத்தியோகத்தர்), தம்பையா (யாழ். போதனா வைத்தியசாலை, இளைப்பாறிய உத்தியோகத்தர்), ஆறுமுகம் (இ.மி.ச, இளைப்பாறிய உத்தியோகத்தர்), தம்பிரத்தினம் (இ. போ. ச.) ஆகியோரின் மைத்துனரும், ஆறுமுகம் (கரன் மதுபானச்சாலை உரிமையாளர் தெல்லிப்பழை) அவர்களின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 7- 10- 94 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக் கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல் :
ஏ. வீரசிங்கம்
(மருமகன்)

34, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(33212)

## வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

முன்னாள் இ. போ. ச. சாரதி வேலுப்பிள்ளை பொன்னம்பலம் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ள - மீனாட்சி தம்பதியின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், பத்மராணி, ஜெயராணி, பிறேமளா, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரகுபதி, சாந்தலிங்கம் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சின்னராசா, நாகராசா, நாகம்மா, பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (6- 10- 94) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் 28, சுப்பிரமணியம் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
க. இரகுபதி
(மருமகன்)

28, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(33219)

## செல்வன் நாகராசா சிவசங்கர்

கொழும்புத்துறையைச் சேர்ந்தவரும், யாழ். பரியோவான் கல்லூரி ஆண்டு 10'A' மாணவனுமாகிய நாகராசா சிவசங்கர் அகால மரணமானார்.

இவர் பருத்தித்துறை பசுபதீஸ்சுவரர் சிவன் கோயில் முகாமையாளர் தியாகராஜா நாகராசா, சுந்தரவல்லி தம்பதியின் புத்திரனும், தாரணி (யாழ். ஆங்கில கன்னியர் மடம்), தர்சினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சாந்தரூபன் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் சகோதரரும், கலாவாணி சுரேந்திரா (பிரான்ஸ்) அமிர்தவல்லி ரவீந்திரன் (ஆசிரியை யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பெறாமகனும், தியாகேஸ்வரி ஆரணியசுந்தரத்தின் (கனடா) மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (6.10.94) காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி, 87 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
சி. நாகராசா
(தந்தை)

87, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(33210)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சர்வதேச ஆசிரியர் தினம்:

# கல்விப் பணிப்பாளர் ஆசிரியருக்கு வாழ்த்து

யாழ்ப்பாணம், ஒக். 6

சர்வதேச ஆசிரியர் தினம் இன்றாகும். அதனையொட்டி யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தச் செய்தி வருமாறு:

ஆசிரியர்களுக்கு எங்கள் சமுதாயத்தில் ஒரு சிறப்பான இடமுண்டு. கல்வி வளர்ச்சியில் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. எடு எடுத்துத்தந்து எழுத்தறிவித்தவனை இறைவன் — குரு என்றெல்லாம் மதித்து வணங்கும் வழக்கம் தமிழர் மரபாகும்.

நமது பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்காக உழைப்பவர் பலர். பல இடர்கள் மத்தியிலும் அலுக்காது, சலிக்காது பாடசாலை சென்று கற்பிப்பவர் மிகப்பலர். இளஞ் சந்ததியினர் முன்னேற்றம் கல்வியிலேயே தங்கியுள்ளது எனக் கருதி அயராது உழைப்பவர் எத்தனையோ பேர். இவர்களின் உருவங்கள் யாவும் நம் ஒவ்வொருவர் மனதிலும் அணையா விளக்காக இருக்க வேண்டும்.

நமது கல்வி முறையில் ஆசிரியர் — மாணவர் உறவு ஒரு முக்கிய அம்சமாகும். இரு சாராரின் நம்பிக்கை, நல்லொழுக்கம், விசுவாசம் என்பவற்றின் அடிப்படையில் எழுச்சிபெறும் "பணித்தல், கீழ்ப்பணிதல்" நன்கு வளம் பெற நாம் ஆசிரியரை மதிப்போம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## இன்று

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றத்தால் நடத்தப்படும் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் ஞாபகார்த்த விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறும். (க)

## நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஒக். 6

ராசி பட்டுச்சோலை நிறுவன ஆதரவில் யாழ்ப்பாணம் நொதேர்ன் விளையாட்டுக் கழகம் நடத்தும் — 'பரா' கிண்ணத்திற்கான — மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு தினம் இன்று பிற்பகல் 2 மணி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும்வலிகாமம் கிழக்குப் பகுதிக்குரிய — தட, கள விளையாட்டுப்போட்டி நாளையும் நாளை மறுதினமும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும் நிறைவு நாள் நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. புலந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக உடற் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் மாணவர் அமைப்பைச் சேர்ந்த செல்வி திலகாவும் பங்குபற்றுவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பின் வலிகாமக் கோட்டத்தைச் சேர்ந்த செல்வி கோமதி நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிப்பார். (உ)

## பன்னிரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை —

பன்னிரு வேங்கைகளின் அஞ்சலி நிகழ்வு வல்வை திருவில் தூபி மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

ஈகச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியை வடமராட்சி கோட்டப் பொறுப்பாளர் அருணா ஏற்றி வைத்தார். கடற்புலிகள் கொடியை கடற்புலிகள் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து வீரவேங்கைகளின் உருவப்படத்திற்கு பெற்றோர், குடும்பத்தினர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அதை அடுத்து பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

(ஒ-க- 173-117-17-155)

## றாகமவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவில் பணியாற்றிவருகின்றார். சம்பவம் இடம்பெற்ற சமயம் இவர் அத்துருகிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி வந்தார்.

இவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்த யாணை பிறப்பித்தார். (உ-எ-6)

## ஆசிரியர் நாள் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 6

அனைத்துலக ஆசிரியர் நாள் இன்று யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் தோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள், அபிவிருத்திச்சபைகள், பழைய மாணவர் சங்கங்கள் என்பனவும் மாணவர்களும் சேர்ந்து ஆசிரியர்களைப் பாராட்டியும், கௌரவித்தும் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

கல்விக் கோட்ட மட்டத்திலான ஆசிரியர் தின விழாக்களும் இன்று நடைபெற உள்ளன. இவ்விழாக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவை பிரதிநிதிகளும், கல்விப் பகுதி அதிகாரிகளும் கலந்து கொள்வர்.

(அ-117-11)

# ரி.வி. விவாதத்தில் திணறிய காமினி!

கொழும்பு, ஒக். 6

நேற்றிரவு ரூ வாஹினியில் இடம்பெற்ற தொலைக்காட்சி விவாதத்தில் காமினி திஸநாயக்கா பல்வேறு கோணங்களிலிருந்து துளைத்தெடுக்கப்பட்டார்.

'ஜனநாயகம்' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா, 'யுக்திய' சிங்கள வார இதழின் ஆசிரியர் சுகந்த தேசப்பிரிய, நீதி, அரசமைப்பு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் ஆகியோர் பிரதான கருத்துரை வழங்கினர். விவாத மண்டபத்திலிருந்து பார்வையாளர்களும் குறுக்குக் கேள்விகளை கேட்க அனுமதிக்கப்பட்டனர்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை குறித்து விவாதத்தில் முக்கியமாக ஆராயப்பட்ட போதும், விவாதம் காமினியைச் சுற்றி வளைத்து முற்றுகையிடும் வியூகமாகவே காட்சியளித்தது. அடுத்தடுத்து விடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க முடியாது காமினி திணறினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை ஆதரித்து காமினி கருத்துரை வழங்க முற்பட்டபோது அவர் பேச முடியாத அளவுக்கு கேள்விக் கணைகள் விடுக்கப்பட்டன.

இறுதியில் காமினி திஸநாயக்கா தான் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்தபோது நிறைவேற்று ஜனாதிபதி முறையை விமர்சித்ததாக ஒப்புக் கொண்டார். (உ-க)

## சமாதானத்திற்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா சொத்துக்களை இங்கு அழித்து நாசமாக்கியுள்ளது.

இத்தனைக்கும் இந்தியாவின் தவறான கணிப்பீடே காரணமாகும்.

இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு படைநடத்தும்போது புரியாத உண்மைகள் காலம் பிந்தி விளங்கியுள்ளது.

இந்திய அரசு தனது வெளியுறவுக் கொள்கையை மாற்ற வேண்டும்; எமது விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

### விடுதலைப் போரை நசுக்க முயல்கிறது

பலஸ்தீனப் போராட்டத்தை — தென்னாபிரிக்க விடுதலைப் போரை — தார்மீக ரீதியாக ஆதரித்த இந்தியா தமிழீழ விடுதலைப் போரை நசுக்க முயல்கிறது.

இந்தியா கொண்டுள்ள மிகைப்படுத்தப்பட்ட அச்ச உணர்வே இதற்குக்காரணம்.

அணுகுண்டைக் கண்டும் அஞ்சாத இந்தியா தலைவர் பிரபாகரனைக் கண்டு அஞ்சுகிறது. இது தமிழர்களின் தன்மானத்தின் சிறப்பை உணர்த்துகிறது.

புலிகள் தமிழ்நாட்டில் பிரிவினை உணர்வை ஏற்படுத்தி விடுவார்கள் என்று இந்தியா நினைக்கிறது. நாம் மிகப் பெரும் ஒடுக்கு முறைகளுக்கு உட்பட்டதாலேயே போராடுகிறோம். ஆனால் இந்தியாவில் — தமிழ்நாட்டில் அவ்வாறான அடக்குமுறை இல்லை. அங்கு பிரிவினையைத் தூண்டவேண்டிய அவசியமோ, தேவையோ, நியாயமோ எமக்கில்லை.

### இந்தியா அஞ்ச தேவையில்லை

ஆகவே இந்தியா எம்மைப் பார்த்து அஞ்சத் தேவையில்லை.

எனவே இந்தியா தனது தவறான பார்வையை அகற்றி, தன் வெளியுறவுக் கொள்கையை மாற்றி எங்களை அங்கீகரிக்க வேண்டும் எனநாம் எதிர்பார்க்கிறோம்.

நாம் இந்தியாவுக்கு நேச நாடாகவே இருக்க விரும்புகிறோம்.

ஸ்ரீலங்காவின் புதிய அரசாங்கம் போருக்கு முடிவு கட்டி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விருப்பம் தெரிவித்துள்ளது. எமது மக்களுக்கு தன்னாட்சி, தாயகம் கொண்ட தீர்வு பேச்சுவார்த்தை மூலம் கிடைக்குமாயின் நாம் அதைப் பரிசீலிப்போம்.

### போர் நிறுத்தம் செய்ய தயக்கம்

போர் நிறுத்தம் செய்ய அரசு தயங்குகின்றது. ஒருபுறம் போர் செய்து கொண்டு மறுபுறம் சமரசம் பேசுவது ஆபத்தானது. போர் நிறுத்தம் செய்யாமல் தொடரும் பேச்சுவார்த்தைகள் சமாதானத்தைப் பாதிக்கலாம்.

நாம் தமிழீழம் எனச் சொல்லிப் போராடுகிறோம். தமிழீழத்துக்கு மாற்றீடாக எமது தாயகப் பிரதேசத்தையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் தீர்ப்பு ஒன்றைப் புதிய அரசு முன்வைத்தால் அதனைப் பரிசீலிக்கத் தயார் எனத் தலைவர் கூறியுள்ளார்.

அரசாங்கம் இராணுவத்துக்கும் இராணுவ நலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. பாரிய இராணுவ நடவடிக்கைகள் செய்வதற்கு தயாராக இருந்ததாகவும் பின் அதை இடைநிறுத்தி வைத்திருப்பதாகவும் அரசு கூறுகிறது.

போரை நிறுத்த அரசு விரும்பினால் — எமது மக்களுக்கு சுயகௌரவமான பாதுகாப்பைத் தர விரும்பினால் அதை ஏற்றுக்கொள்வோம் எனக் கூறியுள்ளோம். அரசு இதை எமது பலவீனம் எனக் கருதினால் எதிர்கால விளைவுகள் விபரீதமாக இருக்கும்.

### ராணுவப் பலத்தோடு நாம் பேசுகின்றோம்

இராணுவப் பலத்தோடுதான் நாம் பேசுகிறோம். எமது மக்களை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. வீரச்சாவடைந்த இந்த பன்னிரு வேங்கைகளின் எதிர்பார்ப்பும் அதுதான். — என்றார்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம், யாழ். மாவட்ட மகளிர் பிரிவு அரசியல் பொறுப்பாளர், செல்வி தணிகைச்செல்வி கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. வே. யோ. வாஞ்சிநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (உ- 155.173)

## உண்ணாவிரதம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்தபோது அவர் அங்கு குழப்பம் செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டது.

நேற்று அவர் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்குள் பலாத்காரமாக பிரவேசிக்க முயன்றபோது கைது செய்யப்பட்டார்.

அவரை பொலிஸ் ... எடுத்தனர். (உ-எ-6)

# கோமாரி நாளை வரும்

யாழ்ப்பாணம், ஒக். 6

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் நாளை காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட இக்கப்பலில் ஆயிரத்து 600 மெற்றிக்தொன் அரிசி, ஆயிரத்து 212 மெற்றிக் தொன் சீனி, 50 மெற்றிக் தொன் கடலை, 50 மெற்றிக் தொன் லக்ஸ்பிறே பால்மா ஆகியன எடுத்து வரப்படுகின்றன.

யாழ்ப்பாணம்
சென் யோசவ்ஸ் வித்தியாலயம்

ஆசிரியர்களை
சகல நலன்களும் பெற்று வாழ
உலக ஆசிரியர் தினத்தில்
★ வாழ்த்துகிறோம் ★

மாணவர்கள்
(33204) யாழ்.சென் யோசவ்ஸ் வித்தியாலயம்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தென்புலோலியூர்
க. சி. சிவசுப்பிரமணியம் தம்பதியரின்
மூத்த புதல்வி
செல்வி யோகதர்சினியின்
பிரிவுத்துயர் பகரும்

# கண்ணீர் கவிதைகள்

| மண்ணில் பூத்தது: | விண் போந்தது: |
|---|---|
| 23 — 07 — 1974 | 20 — 09 — 1990 |

காலையில் தோன்றும் கதிரொளியில்
கங்குல் கழிந்து அழகொளிரும்
மாலையில் பரிதி மறைந்திடவே
மண்டினி ஞாலத்தை இருள் தழுவும்
காட்சி இறைவன் படைப்பாகும் - அதுவே
கருணை இறைவன் வடிவாகும்
மாட்சி இயம்பும் மறையோர்கள்
மன்னிய பனுவல் பொருளாகும்
தோற்றம் மறைவு விதியாகும் - அது
சோகம் மலிந்த கதையாகும் - அருள்
ஏற்றம் கண்ட ஞானியரும்
இறைப்பின் அணைப்பில் சாய்ந்தனரே
இத்திறன் கூறும் தத்துவமும்

நித்தம் கழிந்த நாட்கள் இன்று
ஆண்டுகள் நான்காய் ஆனதம்மா
நின் பிரிவு என்றும் எமையாளும்
நித்தியம் வாழ்வு சுமையாகும்
என்றோ ஒருநாள் எம் வாழ்வும்
இத்தரை மீதே முடிவாகும்
அன்றே எங்கள் ஆவியது
உன்றன் அருகே வரவேகும்
அந்த நாளை எண்ணியே நாம்
சந்ததம் செய்யும் பிரார்த்தனையும்
இறைவன் அருளால் நிறைவாகும் – அற்றைவரை
திருமால் அருளில் நீ வளர்வாய்
செண்பகப் பூவாய் நீ மலர்வாய்.

நின் பிரிவிற் துயருறும்
தென் புலோலியூர்
சிவசுப்பிரமணியம் - குடும்பத்தினர்.

(சி/9281)

# மரண அறிவித்தல்

## திருமதி லோகீஸ்வரி நமசிவாயம்

வண்ணார்பண்ணையை வசிப்பிடமாக கொண்ட லோகீஸ்வரி (லோகீஸ் அக்கா) 5 - 10 - 1994 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் திரு. க. சி. நமசிவாயத்தின் (செயலாளர், யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம், ஓய்வு பெற்ற நில அளவையாளர்) அன்பு மனைவியும், காலம்சென்ற செ. நடராசா, சரஸ்வதியின் சிரேஷ்ட மகளும், திரு. ந. ஜெகநாதன் (பதிவாளர் (யாழ். மாவட்ட நீதிமன்றம்), கோபாலநாதன்(OTS, Colombo தியாகநாதன் (இலங்கை வங்கி, கிளிநொச்சி), திருமதி கனகீஸ்வரி நாகேஸ்வரன், திருமதி நாகீஸ்வரி மகேஸ்வரன் ஆகியோரின் அன்புமிகு சகோதரியும், ஆசிரியை பிரமிளா, (யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்), ஆசிரியை திருமதி மஞ்சுளா சிறிதரன் (West Germany), சிறிதரன் (Holland), பரிமளா (இராமநாதன் நுண்கலை மன்றம் மருதனாமடம்)விஜயதரன் ஆகியோரின் தாயாரும், கு. சிறிதரனின் (West Germany) அன்பு மாமியாரும்,மகிந்தனின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-10-94) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சி. நமசிவாயம்
(கணவன்)

125, ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(33206)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org